# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2410 - 2024 නොවැම්බර් මස 08 වැනි සිකුරාදා - 2024.11.08

*2410 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *2132* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *2149* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2129-B 82625-5,441 (2024/11)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஒய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஒய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஒய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை இராணுவத்தின் நிரந்தர படையின் மருத்துவ ஆலோசகர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்களை கோருதல்

இலங்கை இராணுவ நிரந்தர படையின் நேரடி நிபுணத்துவ அதிகாரி உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை இராணுவ பயிற்சிக் கல்லூரியில் 14 நாட்கள் பயிற்சி அளித்து, இலங்கை இராணுவத்தின் தேவைகளுக்கும் ஏற்ப இலங்கை இராணுவ நிரந்தர படையின் படைப்பிரிவு ஒன்றிற்கு சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

3. **மருத்துவ ஆலோசகர் தொழில் உத்தியோகத்தர்கள்**:

அ. **மயக்க மருத்துவ ஆலோசக நிபுணர்**:

(1) நேரடி லெப்டினன்ட் கர்னல் அதிகார பதவியில் நியமிக்கப்படுவர்.
(2) ஆண் அல்லது பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
(3) வயது: 2024 கார்த்திகை 08 ஆம் திகதிக்கு 45 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.
(4) கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முதுகலை மருத்துவ நிறுவனத்தின் மூலம் சான்றளிக்கப்பட்ட மயக்க மருத்துவ ஆலோசக நிபுணராக இருக்க வேண்டும்.
(5) மருத்துவ தொழிலின் 10 வருட பணி அனுபவம் இருந்தல் வேண்டும்.

ஆ. **ஆலோசகர் பொது அறுவைச் சிகிச்சை நிபுணர்**:

(1) நேரடி லெப்டினன்ட் கர்னல் அதிகார பதவியில் நியமிக்கப்படுவர்.
(2) ஆண் அல்லது பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்
(3) வயது: 2024 கார்த்திகை 08 ஆம் திகதிக்கு 45 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.
(4) கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முதுகலை மருத்துவ நிறுவனத்தின் மூலம் சான்றளிக்கப்பட்ட பொது அறுவைச் சிகிச்சை ஆலோசக நிபுணராக இருக்க வேண்டும்.
(5) மருத்துவ தொழிலில் 10 வருட பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.

இ. **ஆலோசகர் மனநல மருத்துவ நிபுணர்**:

(1) நேரடி லெப்டினன்ட் கர்னல் அதிகார பதவியில் நியமிக்கப்படுவர்.
(2) ஆண் அல்லது பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்
(3) வயது: 2024 கார்த்திகை 08 ஆம் திகதிக்கு 45 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.
(4) கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முதுகலை மருத்துவ நிறுவனத்தின் மூலம் சான்றளிக்கப்பட்ட ஆலோசகர் மனநல மருத்துவ நிபுணராக இருக்க வேண்டும்.
(5) மருத்துவ தொழிலில் 10 வருட பணி அனுபவம் இருந்தல் வேண்டும்.

ஈ. **ஆலோசக மகப்பேறு மருத்துவர் மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர்**:

(1) நேரடி லெப்டினன்ட் கர்னல் அதிகார பதவியில் நியமிக்கப்படுவர்.
(2) ஆண் அல்லது பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
(3) வயது: 2024, கார்த்திகை 08 ஆம் திகதிக்கு 45 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.
(4) கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முதுகலை மருத்துவ நிறுவனத்தின் மூலம் சான்றளிக்கப்பட்ட ஆலோசகர் மகப்பேறு மருத்துவர் மற்றும் மகளிர் மருத்துவ நிபுணராக இருக்க வேண்டும்.
(5) மருத்துவ தொழிலில் 10 வருட பணி அனுபவம் இருந்தல் வேண்டும்.

உ. **ஆலோசகர் மறுசீரமைப்பு பல் மருத்துவம்**:

(1) நேரடி லெப்டினன்ட் கர்னல் அதிகார பதவியில் நியமிக்கப்படுவர்.
(2) ஆண் அல்லது பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

(3) வயது: 2024 கார்த்திகை 08 ஆம் திகதிக்கு 45 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.
(4) கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முதுகலை மருத்துவ நிறுவனத்தின் (PGIM) மூலம் சான்றளிக்கப்பட்ட முனைவர் பட்டம் மற்றும் (MD) ஆலோசகர் மறுசீரமைப்பு பல் மருத்துவ நிபுணராக இருக்க வேண்டும்.
(5) முதுகலை மருத்துவ நிறுவனத்தின் மூலம் பல் மருத்துவ நிபுணராக இருக்க வேண்டும்.
(6) பல் மருத்துவத்தின் 10 வருட பணி அனுபவம் இருந்தல் வேண்டும்.

ஊ. **ஆலோசகர் பல் சீரமைப்பு மருத்துவம்:**

(1) நேரடி லெப்டினன்ட் கர்னல் அதிகார பதவியில் நியமிக்கப்படுவர்.
(2) ஆண் அல்லது பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
(3) வயது: 2024, கார்த்திகை 08 ஆந் திகதிக்கு 45 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.
(4) கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முதுகலை மருத்துவ நிறுவனத்தின் (PGIM) மூலம் சான்றளிக்கப்பட்ட முனைவர் பட்டம் மற்றும் (MD) ஆலோசகர் பல் சீரமைப்பு மருத்துவ நிபுணராக இருக்க வேண்டும்.
(5) முதுகலை மருத்துவ நிறுவனத்தின் மூலம் பல் மருத்துவ நிபுணராக இருக்க வேண்டும்.
(6) பல் மருத்துவத்தின் 10 வருட பணி அனுபவம் இருந்தல் வேண்டும்.

4. **அடிப்படை தகைமைகள்:**

விண்ணப்பதாரர்கள் இலங்கை இராணுவத்தில் இணைவதற்கு பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

அ. குடியுரிமை - இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ஆ. வயது - விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசி திகதியின் வயது அதன் உத்தியோகத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளது.
இ. உயரம் - ஆண் - 5 அடி 6 அங்குலத்திற்கு குறையாது இருத்தல் வேண்டும்.
பெண் - 5 அடி 3 அங்குலத்திற்கு குறையாது இருத்தல் வேண்டும்.
ஈ. நிறை - ஆண் - 55 கிலோகிராமுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.
பெண் - 45 கிலோகிராமுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.
உ. மார்பு - ஆண் - 32 அங்குலத்திற்கு குறையாது இருத்தல் வேண்டும்.
ஊ. உடல் - உடல் நிறை குறியீட்டெண் கருதப்படுகிறது.
எ. மருத்துவ பரிசோதனை - இராணுவ மருத்துவமனை நடாத்தும் முழுப் பரிசோதனையில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும்.
ஏ. நிலை - திருமணமான அல்லது திருமணமாகாத.

5. **சேவை நிபந்தனைகள்**

அ. ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் இலங்கை இராணுவக் கல்லூரியில் குறுகிய கால இராணுவ அடிப்படைப் பயிற்சி நெறியைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆ. இராணுவத் தளபதியின் தீர்மானத்தின்படி, ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அதிகாரிகள் இலங்கையின் எந்தப் பகுதியிலும் அல்லது வெளிநாட்டிலும் கடமைப் பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

இ. பயிற்சியின் போதும் அதற்குப் பின்னரும் சிவில் சட்டம் மற்றும் இராணுவச் சட்டத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

ஈ. அரச சுகாதார அமைச்சு மற்றும் தனியார் மருத்துவமனையில் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால், முழுநேர இராணுவ சேவைக்கு விடுவிக்கப்படலாம் என்று நிறுவனத்தின் தலைவரின் சான்றிதழுடன் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

உ. தொழில்முறை அதிகாரிகளாகப் பணியமர்த்தப்பட்ட அதிகாரிகள், நில்தரினியன் இராணுவ ஆணை (12/2019) அறிவுறுத்தல்கள் மற்றும் தொழில்முறை அதிகாரி ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளின்படி திரையிடப்படுவார்கள்.

ஊ. விசேட வைத்திய அதிகாரிகள் சுகாதார திணைக்களத்துடன் கைச்சாத்திடப்பட்ட பத்திரத்தில் இலங்கை இராணுவத்திற்கு இடமாற்றம் செய்யப்படுகிறது. மேலும் ஆரம்ப சேவைக் காலம் 05 ஆண்டுகள். சேவை மேலும் நீட்டிக்கப்பட்டால், அது வருடாந்தம் செய்யப்பட வேண்டும்.

6. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்**: இலங்கை இராணுவத்தின் உத்தியோகத்தர்களாக பின்வரும் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்படுவார்கள் :

| தொடர் இல. | பதவி | அரச முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 3/2016 இன் படி | | | வேறு |
|---|---|---|---|---|---|
| | | திரட்டிய சம்பளம் 2020 இருந்து | 2020.01.01 முதல் சம்பள ஏற்றம் | ஆகக்கூடிய திரட்டிய சம்பளம் | |
| 1 | இரண்டாவது லெப்டினன்ட் | ரூ. 41,905.00 | - | | இலங்கை மருத்துவ சமூகம் மூலம் அங்கீரிக்கப் பட்டது |
| 2 | லெப்டினன்ட் | ரூ. 47,615.00 | 30X1335 (வருடாந்த) | ரூ. 87,665.00 | |
| 3 | கெப்டன் | ரூ. 55,625.00 | 24X1335 (வருடாந்த) | ரூ. 87,665.00 | |
| 4 | மேஜர் | ரூ. 60,965.00 | 22X1335 (வருடாந்த) | ரூ. 90,335.00 | |
| 5 | லெப்டினன்ட் கர்ணல் | ரூ. 62,595.00 | 17X2170 (வருடாந்த) | ரூ. 98,455.00 | |
| 6 | கர்ணல் | ரூ. 76,175.00 | 30X1335 (வருடாந்த) | ரூ. 113,065.00 | |
| 7 | பிரிகேடியர் | ரூ. 80,515.00 | 30X1335 (வருடாந்த) | ரூ. 113,065.00 | |
| 8 | மேஜர் ஜெனரல் | ரூ. 88,000.00 | 30X1335 (வருடாந்த) | ரூ. 120,400.00 | |
| 9 | லெப்டினன்ட் ஜெனரல் | ரூ. 93,400.00 | 30X1335 (வருடாந்த) | ரூ. 120,400.00 | |
| 10 | ஜெனரல் | ரூ. 101,500.00 | 30X1335 (வருடாந்த) | ரூ. 120,400.00 | |

7. **ஏனைய வசதிகள்** -

(அ) பின்வரும் மாதாந்த கொடுப்பனவுகள் செலுத்தப்படும்:

(1) தகைமை கொடுப்பனவுகள்
(2) இலவச உணவு அல்லது உணவுக் கொடுப்பனவுகள்
(3) உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டிருக்கையில் அனுமதி குலைவுப்படி (திருமணமான உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)
(4) சீருடை பேணல் கொடுப்பனவு
(5) இலங்கை மருத்துவ சபையினால் அனுமதிக்கப்பட்டள்ள கொடுப்பனவுகள்.

(ஆ) பின்வரும் வசதிகள் வழங்கப்படும்/கொடுப்பனவுகள் செலுத்தப்படும்

(1) உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டிருக்கையில் இலவச தங்குமிட வசதி.
(2) வாடகை வீடுகளில் வசிக்கும் போது மட்டுப்படுத்தப்பட்ட வீட்டு வாடகை.
(3) இலவச சீருடை.
(4) திருமணமான உத்தியோகத்தர்களுக்கு பணியாள் படி அல்லது திருமணமாகாத உத்தியோகத்தர்களுக்கு பணியாள் சேவை.
(5) உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வேலைத்தலத்திலிருந்து வீடு வரை பிரயாணம் செய்வதற்கு மாதத்திற்கு ஒரு தடவை புகையிரத ஆணைச்சீட்டொன்று.

8. சம்பளம் மற்றும் அடுத்த கட்ட சேவை நிபந்தனைகள் தொடர்பில் பின்வரும் ஒழுங்குவிதிகள் உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும்.

அ. இராணுவ சம்பளக் கோவை

ஆ. 1993 ஆம் ஆண்டு ஒகத்து 17 ஆம் திகதிய 780/7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 1992 ஆம் ஆண்டின் இராணுவ உத்தியோகத்தர் (நிரந்தர படையணி) ஒழுங்குவிதிகள்.

இ. 1989 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் திகதிய 562/11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் இராணுவ ஓய்வூதிய மற்றும் சம்பளப் பணிக்கொடை பிரமாணக் குறிப்பு.

9. இங்கு கீழே பந்தி 12 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரகடனப் பத்திரமொன்றில் பெற்றோர் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடப்பட வேண்டும் என்பதுடன், அதனை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி அபேட்சகர்களை நியமிப்பதற்கு முன்னர் அபேட்சகர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் பிரகடனத்தில் உள்ளவாறு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் பிணைமுறியொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும். தந்தை உயிருடன் இருக்கும் கெடேற் உத்தியோகத்தர் ஒருவரின் பாதுகாவலராக தந்தை இருப்பார் என்பதுடன், அவர் உயிருடன் இல்லாதிருப்பின் மட்டும் தாய் அல்லது பாதுகாவலர் பாதுகாவலராக இருப்பார்.

10. **விண்ணப்பதாரரின் தாய், தந்தை அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடப்பட வேண்டிய பிரகடனம்**

அ. நான், இலங்கை இராணுவத்தின் கெடேற் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பதாரரான ...................... என்பவரின் தந்தை/தாய்/பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ பயிற்சி நெறியைத் தொடர தெரிவு செய்யப்படின், இங்கு பின்வரும் விடயங்கள் தொடர்பான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(1) பயிற்சிக் காலத்தின் போது விண்ணப்பதாரருக்கு ஏற்க நேரிடும் அனைத்து தனிப்பட்ட செலவுகளையும் ஏற்றல்.

(2) மேற்கூறிய விண்ணப்பதாரர் பயிற்சிக் காலப்பகுதியில் சுய விருப்புடன் அதிகார ஆணையிலிருந்து வெளியேறினால், அவர் சார்பில் அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்ட அனைத்து செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிச் செலுத்துதல்.

(3) மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரர் பயிற்சிக் காலப்பகுதியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் (துர்நடத்தை காரணமாக அல்லது தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காரணி காரணாக) அதிகார ஆணை பெறுவதற்குத் தகுதியற்றவர் என அதிகாரிகளினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமாயின், அவர் சார்பில் அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்ட அனைத்து செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிச் செலுத்தல்.

❖ பொருந்தாத சொற்களை வெட்டி விடுக.

........................................
தாய் /தந்தை /பாதுகாவலரின் கையொப்பம்.

பெயரும் முகவரியும் (தெளிவான எழுத்துக்களில்): ........................................
திகதி: ........................................
சாட்சி கையொப்பம்: ........................................
பெயரும் முகவரியும் (தெளிவான எழுத்துக்களில்): ........................................

11. **மொழித் தேவைகள்**: தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்திற்கும் அச்சட்டத்திற்கான திருத்தங்களுக்கும் அமைவாகவும், இலங்கைக் குடியரசின் அரசகரும மொழிக் கொள்கையை அமுல் செய்வதற்கு காலத்துக்கு காலம் விதிக்கப்படுகின்ற சட்டத்திட்டங்களுக்கும் ஏற்ப செயற்படுதல் வேண்டும்.

12. **அடையாளத்தை உறுதிப்படுத்தல்**: விண்ணப்பதாரர்கள் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும். இதற்காக ஆட்பதிவு திணைக்களம் அல்லது தபால் மா அதிபரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதி பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

13. அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை, அவர்கள் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் விடுவிக்க முடியும் என்ற திணைக்களத் தலைவரின் அத்தாட்சியுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

14. **விண்ணப்பங்கள்**: விண்ணப்பப் படிவம் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டு, 2024 கார்த்திகை 16 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, "ஆளனி நிருவாகப் பணிப்பாளர் சபை, இலங்கை இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு" என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை இராணுவ நிரந்தர படையில் குறுகியகால கெடேற் உத்தியோகத்தர் பாடநெறியின் கெடேற் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும், இராணுவத் தலைமையகத்தினால் விண்ணப்பங்கள்

விநியோகிக்கப்படவும் மாட்டாது. மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்வதற்கும் www.army.lk எனும் இணையத்தளத்தினுள் பிரவேசிக்கவும்.

15. **விண்ணப்பத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகளை அனுப்புதல் வேண்டும்:**

அ. பிறப்புச் சான்றிதழ்.
ஆ. கல்வித் தகைமைகளை அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ்கள்.
இ. பாடசாலை விடுகைச் சான்றிதழ்.
ஈ. கிராம உத்தியோகத்தர் சான்றிதழ்.
உ. பொலிஸ் தடையகற்றல் சான்றிதழ்.
ஊ. விண்ணப்பதாரி சான்றிதழ்.
எ. தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ்.
ஏ. விளையாட்டு மற்றும் இணைச் செயற்பாடுகளுக்கான சான்றிதழ்கள்.
ஐ. விண்ணப்பதாரரை அறிமுகமான (நற்சாட்சிப் பத்திரமொன்றை வழங்கக்கூடிய ஒருவரிடமிருந்து) நபர்களிடமிருந்து அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களும் விண்ணப்பதாரர் இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சாட்சிப் பத்திரமொன்றும்.
ஒ. பொருத்தமான ஏனைய சான்றிதழ்கள்.
ஓ. மேலும், கிராம உத்தியோகத்தரினால் அல்லது சட்டத்தரணி ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நிழற் பிரதியொன்றையும், அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 2"x 2½" அளவிலான புகைப்படம் ஒன்றையும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

16. **நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல்:** மேற்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் ஆரம்ப தெரிவுக்கு உட்படுத்தப்படுவார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் இராணுவத் தளபதியால் விதிக்கப்படுகின்றவாறு பரீட்சைகளுக்குத் தோற்றுதல் வேண்டும். பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படுகின்ற தெரிவுக் குழுவின் முன்னால், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு இறுதியாக தெரிவு செய்யப்படுவார்கள்.

17. தேர்வுக் குழுவினால் நேர்முகப்பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடம், நேரம் மற்றும் திகதி என்பன கடிதம் மூலம் அறியத்தரப்படும். நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும். இது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் பயணச் செலவுகள் அல்லது பிற செலவுகள் எதுவும் இலங்கை குடியரசினால் செலுத்தப்படமாட்டாது.

18. விண்ணப்பதாரி ஒருவரைப் பரிந்துரைக்க முயற்சி செய்யும் எவரும் நட்சான்றிதழொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்யலாம். விண்ணப்பதாரியொருவரின் தேர்வை எந்த வகையிலும் தூண்டுவது அல்லது செல்வாக்குச் செலுத்த முயற்சிப்பது விண்ணப்பதாரியை தகுதி இழக்கச் செய்யும்.

19. ஆட்சேர்ப்புக்குத் தகைமை பெறாத விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது. அத்தகைய விண்ணப்பதாரர்களினால் முன்வைக்கப்படுகின்ற விசாரணைகள் ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

**குறிப்பு**.- இந்த வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப் பட்டுள்ளது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வாசகங்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படின், சிங்கள மொழிமூல வாசகம் மேலோங்கி நிற்கும்.

எச். எல். வீ. எம். லியனகே ஆர்டப்ளியூபீ ஆர்எஸ்பீ என்டியூ,
லெப்டினன்ட் ஜெனரல்,
இராணுவத் தளபதி.

இலங்கை இராணுவத் தலைமையகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர,
கொழும்பு,
2024, ஒற்றோபர் 21.

11-135/1

# இலங்கை இராணுவத்தின் நிரந்தர படையின் கெடேற் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்களை கோருதல்

1. இலங்கை இராணுவத்தின் நிரந்தர படைக்கு கெடேற் உத்தியோகத்தர்கள் கீழ்க் காணப்படும் தொழில்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

அ. பல் மருத்துவம்
ஆ. தகவல் தொழில்நுட்பம்
இ. சிவில் பொறியியல்
ஈ. மின் பொறியியல்
உ. இயந்திர பொறியியலாளர்
ஊ. மின் மற்றும் இயந்திர பொறியியல்
எ. கட்டிடங்களை நிலமளப்போர்
ஏ. பொறியியலாளர்
ஐ. கணக்காளர்
ஒ. ஒலி இயக்கு பொறியியலாளர்
ஓ. கலாச்சார நடனக் குழு மற்றும் உளவியல் கலாச்சார நடனக் குழு
ஔ. உளவியல்

2. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை இராணுவ பயிற்சிக் கல்லூரியில் 04 மாத பயிற்சி அளித்து, இலங்கை இராணுவத்தின் தேவைகளுக்கு ஏற்ப இலங்கை இராணுவ நிரந்தர படையின் படைப்பிரிவு ஒன்றிற்கு சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

3. **அடிப்படை தகைமைகள்:**

| | |
|---|---|
| அ. குடியுரிமை: | இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். |
| ஆ. திருமணம்: | தொழில்களின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது. |
| இ. வயது : | விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் தேதியில் வயது அந்தந்த தொழில்களின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது. |
| ஈ. உயரம் : | ஆண் - 5 அடி 6 அங்குலத்திற்கு குறையாது இருத்தல் வேண்டும்.<br>பெண் - 5 அடி 3 அங்குலத்திற்கு குறையாது இருத்தல் வேண்டும். |
| உ. நிறை : | ஆண் - 55 கிலோகிராமுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.<br>பெண் - 45 கிலோகிராமுக்கு குறையாது இருத்தல் வேண்டும். |
| ஊ. மார்பு: | ஆண் - 32 அங்குலத்திற்கு குறையாது இருத்தல் வேண்டும். |
| எ. உடல் நிறை : | 18.5 kg/ $m^2$ - 25 kg/ $m^2$ இடையே இருத்தல் வேண்டும். |
| ஏ. மருத்துவ பரிசோதனை: | இராணுவ மருத்துவமனை நடாத்தும் முழுப் பரிசோதனையில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும். |
| ஐ. பார்வைக் கூர்மை: | 6/6 (மூக்கு கண்ணாடி மற்றும் வில்லை பாவிக்காது) இருத்தல் வேண்டும். மேலும் பார்வைக் கூர்மை 6/18 நடக்கும் போது கண்ணாடி மூலம் வலது கண் பார்வைக் கூர்மை 6/6 இடது கண் 6/9 ஆக இருக்கும் விண்ணப்பதாரர்களாக இருத்தல் வேண்டும். |

4. **கல்வித் தகைமைகள்**

அ. க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் மூன்று அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (சாதாரண சித்தி) வேண்டும். சாதாரண பொதுப் பரீட்சையில் 30% புள்ளிகளை பெற்றிருத்தல் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு சேர்ப்பு “ஆம்” என்று குறிப்பிடப்பட வேண்டும்.

மற்றும்

ஆ. க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஒரே தடவையில் ஐந்து(05) பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் எட்டு (08) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் மூன்றுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், சிங்களம் / தமிழ் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல் அல்லது ஆங்கில பாடத்திற்கு சாதாரண சித்தி (S) மட்டும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் ஆங்கில பாடத்திற்கு திறமை சித்தி (C) பெற்றிருத்தல் அல்லது ஆங்கில மொழி மூலம் NVQ – 4 ஆம் மட்டத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றிடமிருந்து டிப்ளோமா /பட்டம் பெற்றிருத்தல். (NVQ சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)

அல்லது

இ. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட க.பொ.த. (சாதாரண தரம்) மற்றும் க.பொ.த (உயர் தரம்) பரீட்சைகளுக்குச் சமமான சர்வதேசப் பரீட்சை ஒன்றில் (Pearson Edexcel GCSE,GCE மற்றும் Cambridge அல்லது மற்றவை) அதற்குச் சமமான சித்தியை பெற்றிருத்தல் வேண்டும். (மேலே உள்ள கட்டாயப் பாடங்கள் உட்பட)

5. **வேறு தகைமைகள்** : தேசிய / சர்வதேச மட்டத்தில் விளையாட்டு, தலைமைத்துவம், வேறு சாதனைகளை பெற்றிருத்தல் மற்றும் பிற மொழிகளை கையாளக்கூடிய திறமை (சிங்களம் மற்றும் ஆங்கிலம் தவிர) விசேட தகைமைகளாக கருதப்படும்.

6. **பொதுவானது**

அ. பயிற்சிக் காலத்தில் கெடேற் உத்தியோகத்தர்களுக்குத் திருமணம் முடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. (திருமணமாத தொழில்களுக்கிடையில் கெடெற் உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)

ஆ. விண்ணப்பதாரர்கள் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும் ஆட்சேர்ப்புக்கு முன், இலங்கை இராணுவத்தால் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன், அதில் அவர்கள் தேர்ச்சி பெற வேண்டும்.

7. **மருத்துவ அதிகாரி (கெப்டன்)**

அ. திருமணமாகிய/திருமணமாகாத இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆ. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இ. 2024 கார்த்திகை 08 அன்று 32 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

ஈ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட மருத்துவப் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

உ. இலங்கை மருத்துவ சபையில் மருத்துவராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல்.

8. **பல் மருத்துவ அதிகாரி (லெப்டினன்ட்)**

அ. திருமணமாகாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

ஆ. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இ. 08 கார்த்திகை, 2024 அன்று 28 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

ஈ. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட பல் மருத்துவப் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் பல் மருத்துவப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

9. **தகவல் தொழில்நுட்ப அதிகாரி (கெப்டன்):**

| தொ. இல. | நேரடி பட்டியலிடப்பட்ட தொழில்முறைகள் | தகைமை விபரங்கள் |
|---|---|---|
| 1 | மென்பொருள் பொறியியலாளர் | ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.<br>திருமணமாகிய/திருமணமாகாத இருபாலருக்கும் விண்ணப்பிக்கலாம்.<br>கார்த்திகை 08, 2024 அன்று 32 வயதுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட பல் மருத்துவப் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் பல் மருத்துவப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.<br>மருத்துவ தொழிலின் 2 1/2 வருட பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.<br>சிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்தில் முதுகலைப் பட்டம் பெறுவது கூடுதல் தகுதியாகக் கருதப்படுகிறது. |
| 2 | பிணைய பொறியியலாளர் | |
| 3 | வன்பொருள் பொறியிலாளர் | |
| 4 | தகவல் பாதுகாப்பு ஆய்வாளர் | |
| 5 | தகவல் தொழில்நுட்ப தணிக்கையாளர் | |
| 6 | பிணைய பாதுகாப்பு பொறியியலாளர் | |
| 7 | இணைய பாதுகாப்பு பொறியியலாளர் | |
| 8 | இணைய குற்றவியல் ஆய்வாளர் | |
| 9 | சம்பவ ஆய்வாளர் பதிலளிப்பவர் | |
| 10 | காட்சி தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர் | |

10. **சிவில் பொறியியலாளர் அதிகாரி (கெப்டன்):**

அ. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆ. திருமணமாகிய/திருமணமாகாத இருபாலாருக்கும் விண்ணப்பிக்கலாம்.

இ. 08 கார்த்திகை, 2024 அன்று 32 வயதுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

ஈ. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளங்கலை அறிவியல்/தொழில்நுட்ப மின் பொறியியல் பாடநெறியை நிறைவு செய்தல்.

உ. அங்கீகரிக்கப்பட்ட தொழிலில் 2 1/2 வருட பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.

ஊ. இலங்கை பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட மின் பொறியியல் பரீட்சையின் முதலாம் பகுதி மற்றும் பரீட்சையின் இரண்டாம் பகுதியின் முடிவுகள் (பழைய பாடத்திட்டம்) அல்லது பரீட்சையின் முதல் மற்றும் இரண்டாம் பகுதி மற்றும் மூன்றாம் பகுதி (புதிய பாடத்திட்டம்) வெற்றிகரமாக முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

எ. சிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்தில் முதுகலைப் பட்டம் பெறுவது கூடுதல் தகுதியாகக் கருதப்படுகிறது.

ஏ. உயர்தர பரீட்சையின் இணைப்பு கணிதம் பாடத்தின் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

11. **சிவில் பொறியியலாளர் அதிகாரி (லெப்டினனன்ட்):**

அ. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆ. திருமணமாகாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

இ. கார்த்திகை 08, 2024 அன்று 28 வயதுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.

ஈ. தேசிய பொறியியல் டிப்ளமோ (NDES), பொறியியல் உயர் தேசிய டிப்ளமோ (HNDE) ,தேசிய தொழில்நுட்ப (NDT) அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

உ. அங்கீகரிக்கப்பட்ட தொழிலில் 2 வருட பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.

ஊ. இலங்கை பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட சிவில் பொறியியல் பரீட்சையின் முதலாம் பகுதி மற்றும் பரீட்சையின் இரண்டாம் பகுதியின் முடிவுகள் (பழைய பாடத்திட்டம்) அல்லது பரீட்சையின் முதல் மற்றும் இரண்டாம் பகுதி மற்றும் மூன்றாம் பகுதி (புதிய பாடத்திட்டம்) வெற்றிகரமாக முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

எ. சிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்தில் முதுகலைப் பட்டம் பெறுவது கூடுதல் தகுதியாகக் கருதப்படுகிறது.

12. **மின் பொறியியலாளர் அதிகாரி (கெப்டன்):**

அ. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணபபிக்கலாம்.
ஆ. திருமணமாகிய/திருமணமாகாத இருபாலாருக்கும் விண்ணப்பிக்கலாம்.
இ. 08 கார்த்திகை, 2024 அன்று 32 வயதுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.
ஈ. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளங்கலை அறிவியல்/தொழில்நுட்ப மின் பொறியியல் பாடநெறியை நிறைவு செய்தல்.
உ. அங்கீகரிக்கப்பட்ட தொழிலில் 2 1/2 வருட பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.
ஊ. இலங்கை பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட மின் பொறியியல் பரீட்சையின் முதலாம் பகுதி மற்றும் பரீட்சையின் இரண்டாம் பகுதியின் முடிவுகள் (பழைய பாடத்திட்டம்) அல்லது பரீட்சையின் முதல் மற்றும் இரண்டாம் பகுதி மற்றும் மூன்றாம் பகுதி (புதிய பாடத்திட்டம்) வெற்றிகரமாக முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.
எ. சிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்தில் முதுகலைப் பட்டம் பெறுவது கூடுதல் தகுதியாகக் கருதப்படுகிறது.

13. **மின் பொறியியலாளர் அதிகாரி (லெப்டினன்ட்):**

அ. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணபபிக்கலாம்.
ஆ. திருமணமாகாதவர்களுக்கு மட்டும் விண்ணபபிக்கலாம்.
இ. கார்த்திகை 08, 2024 அன்று 28 வயதுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.
ஈ. தேசிய பொறியியல் டிப்ளமோ (NDES), பொறியியல் உயர் தேசிய டிப்ளமோ (HNDE), தேசிய தொழில்நுட்ப (NDT) மொரட்டுவை அல்லது மட்டக்குளியில் உள்ள அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
உ. அங்கீகரிக்கப்பட்ட தொழிலில் 2 வருட பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.
ஊ. இலங்கை பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட மின் பொறியியல் பரீட்சையின் முதலாம் பகுதி மற்றும் பரீட்சையின் இரண்டாம் பகுதியின் முடிவுகள் (பழைய பாடத்திட்டம்) அல்லது பரீட்சையின் முதல் மற்றும் இரண்டாம் பகுதி மற்றும் மூன்றாம் பகுதி (புதிய பாடத்திட்டம்) வெற்றிகரமாக முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.
எ. சிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்தில் முதுகலைப் பட்டம் பெறுவது கூடுதல் தகுதியாகக் கருதப்படுகிறது.

14. **இயந்திர பொறியியலாளர் (கெப்டன்):**

அ. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணபபிக்கலாம்.
ஆ. திருமணமாகிய/திருமணமாகாத இருபாலாருக்கும் விண்ணப்பிக்கலாம்.
இ. 08 கார்த்திகை, 2024 அன்று 32 வயதுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.
ஈ. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளங்கலை அறிவியல்/தொழில்நுட்ப இயந்திர பொறியியல் பாடநெறியை நிறைவு செய்தல்.
உ. அங்கீகரிக்கப்பட்ட தொழிலில் 2 1/2 வருட பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.
ஊ. இலங்கை பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட இயந்திர பொறியியல் பரீட்சையின் முதலாம் பகுதி மற்றும் பரீட்சையின் இரண்டாம் பகுதியின் முடிவுகள் (பழைய பாடத்திட்டம்) அல்லது பரீட்சையின் முதல் மற்றும் இரண்டாம் பகுதி மற்றும் மூன்றாம் பகுதி (புதிய பாடத்திட்டம்) வெற்றிகரமாக முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.
எ. சிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்தில் முதுகலைப் பட்டம் பெறுவது கூடுதல் தகுதியாகக் கருதப்படுகிறது.

15. **இயந்திர பொறியியலாளர் (லெப்டினன்ட்):**

அ. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணபபிக்கலாம்.
ஆ. திருமணமாகாதவர்களுக்கு மட்டும் விண்ணப்பிக்கலாம்.
இ. 08 கார்த்திகை, 2024 அன்று 28 வயதுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.
ஈ. தேசிய பொறியியல் டிப்ளமோ (NDES), பொறியியல் உயர் தேசிய டிப்ளமோ (HNDE), தேசிய தொழில்நுட்ப (NDT) மொரட்டுவை அல்லது மட்டக்குளியில் உள்ள அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

உ. அங்கீகரிக்கப்பட்ட தொழிலில் 2 வருட பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.

ஊ. இலங்கை பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட இயந்திர பொறியியல் பரீட்சையின் முதலாம் பகுதி மற்றும் பரீட்சையின் இரண்டாம் பகுதியின் முடிவுகள் (பழைய பாடத்திட்டம்) அல்லது பரீட்சையின் முதல் மற்றும் இரண்டாம் பகுதி மற்றும் மூன்றாம் பகுதி (புதிய பாடத்திட்டம்) வெற்றிகரமாக முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

எ. சிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்தில் முதுகலைப் பட்டம் பெறுவது கூடுதல் தகுதியாகக் கருதப்படுகிறது.

**16. கட்டிடக்கலை நிபுணர் (கெப்டன்):**

அ. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆ. திருமணமாகிய/திருமணமாத இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இ. 08, கார்த்திகை, 2024 அன்று 32 வயதுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

ஈ. கட்டமைக்கப்பட்ட சூழலில் அறிவியல் இளங்கலை அல்லது கட்டிடக்கலையில் அறிவியல் இளங்கலை அல்லது நகரம் மற்றும் நாட்டு திட்டமிடலில் இளங்கலை அறிவியல் அல்லது மொரட்டுவை பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் நிலப்பரப்பு திட்டமிடலில் இளங்கலை அறிவியல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

உ. இலங்கை கட்டிடக்கலை நிறுவனம் நடாத்தும் கட்டிடக்கலை பற்றி தொழில்முறை தேர்வின் 1 மற்றும் 2 ஆம் கட்டங்களில் தேர்ச்சி சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஊ. இலங்கை கட்டிடக்கலை நிறுவகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்ற சமமான தகைமைகளைப் பெற்றிருத்தல்.

ஏ. அங்கீகரிக்கப்பட்ட தொழிலில் 2 1/2 வருட பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.

எ. சிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்தில் முதுகலைப் பட்டம் பெறுவது கூடுதல் தகுதியாகக் கருதப்படுகிறது.

**17. கட்டிடக்கலை நிபுனர் (லெப்டினன்ட்):**

அ. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆ. திருமணமாகாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

இ. 08 கார்த்திகை, 2024 அன்று 28 வயதுக்கு மேற்படாதவர்களாக இருக்க வேண்டும்.

ஈ. கட்டமைக்கப்பட்ட சூழலில் அறிவியல் இளங்கலை அல்லது கட்டிடக்கலையில் அறிவியல் இளங்கலை அல்லது நகரம் மற்றும் நாட்டு திட்டமிடலில் தேசிய பொறியியல் டிப்ளோமா (NDES), பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDE), தேசிய தொழில்நுட்ப (NDT) மொரட்டுவை அல்லது மட்டக்குளியில் உள்ள அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

உ. இலங்கை கட்டிடக்கலை நிறுவனம் நடாத்தும் கட்டிடக்கலை பற்றி தொழில்முறை தேர்வின் 1 மற்றும் 2 ஆம் கட்டங்களில் தேர்ச்சி சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஊ. இலங்கை கட்டிடக்கலை நிறுவகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்ற சமமான தகைமைகளைப் பெற்றிருத்தல்.

எ. அங்கீகரிக்கப்பட்ட தொழிலில் 2 வருட பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.

**18. நிலமளப்போர் (கெப்டன்)**

அ. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
ஆ. திருமணமாகிய/திருமணமாத இருபாலாருக்கும் விண்ணப்பிக்கலாம்.

இ. 08 கார்த்திகை, 2024 அன்று 32 வயதுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

ஈ. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளங்கலை அறிவியல்/நிலமளப்போர் பாடநெறியை நிறைவு செய்தல்.

அல்லது

உ. தியத்தலாவை கணக்கெடுப்பு மற்றும் வரைப்படும் நிலையத்தினால் நடாத்தப்படும் நிலமளப்போர் பாடநெறியை நிறைவு செய்தல்.

ஊ. சிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்தில் முதுகலைப் பட்டம் பெறுவது கூடுதல் தகுதியாகக் கருதப்படுகிறது.

எ. அங்கீகரிக்கப்பட்ட தொழிலில் 2 1/2 வருட பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.

19. **நிலமளப்போர் (லெப்டினன்ட்)** :

அ. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆ. திருமணமாகாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

இ. 08 கார்த்திகை, 2024 அன்று 28 வயதுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

ஈ. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளங்கலை அறிவியல்/நிலமளப்போர் பாடநெறியை நிறைவு செய்தல்.

அல்லது

உ. தேசிய பொறியியல் டிப்ளமோ (NDES), பொறியியல் உயர் தேசிய டிப்ளமோ (HNDE), தேசிய தொழில்நுட்ப (NDT) அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

ஊ. அங்கீகரிக்கப்பட்ட தொழிலில் 2 வருட பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.

எ. சிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்தில் முதுகலைப் பட்டம் பெறுவது கூடுதல் தகுதியாகக் கருதப்படுகிறது.

20. **மின் மற்றும் இயந்திர பொறியியலாளர்**

அ. ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆ. திருமணமாகாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

இ. 08 கார்த்திகை, 2024 அன்று 28 வயதுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.

ஈ. மொரட்டுவ பல்கலைக்கழகம் வழங்கும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமாவில் (இயந்திர பொறியியல்) சித்தியடைந்தார்.

அல்லது

உ. மட்டக்குளிய உயர்தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் உயர் தேசிய (HNDE) டிப்ளோமா (இயந்திர பொறியியல்) சித்தியடைந்துள்ளார்.

ஊ. கட்டுநாயக்கா பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (NDES), (இயந்திர பொறியியல்) சித்தியடைந்துள்ளார்.

எ. பரீட்சை திணைக்களத்தினால் நடாத்தப்படும் தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைந்து சம்பந்தப்பட்ட துறையில் 05 வருட அனுபவம்.

ஏ. சிட்டி அன்ட் கில்ட் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளமோ (இயந்திர பொறியியல்) – NVQ 05 சித்தியடைந்துள்ளார்.

ஐ. இலங்கை தேசிய தொழிற்பயிற்சி நிறுவனத்தின் தேசிய தொழிற்பயிற்சி தகைமையில் சித்தியடைதல்.

ஒ. IESL நிறுவனம் முழுவதும் பொறியியலாளர் தோடர் நிறுவனம் அங்கீகரிக்கபட்ட தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைதல்.

ஓ. மேற் குறிப்பிடப்பட்ட டிப்ளோமா பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**21. கணக்கு அதிகாரி (கெப்டன்)**

அ. ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.
ஆ. திருமணமாகிய/திருமணமாகாத இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
இ. 08 கார்த்திகை, 2024 அன்று 32 வயதுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.
ஈ. இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கணக்கியல்/நிதித்துறையில் இளங்கலைப் பட்டம் (கணக்கியல்/நிதி/நிதி முகாமைத்துவம், வணிக நிர்வாகக் கணக்கியல்/நிதி, வணிக முகாமைத்துவக் கணக்கியல்/நிதி, வர்த்தகம் ஆகியவற்றில் பிரதானம்) சித்தியடைந்தார்.

மற்றும்

பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் வணிகக் கட்டம் - 2 அல்லது அதற்கு சமமான தகுதி அல்லது பட்டய மேலாண்மை கணக்காளர்கள் நிறுவனத்தின் மேலாண்மை கட்டம்

அல்லது

சான்றளிக்கப்பட்ட மேலாண்மை கணக்காளர்கள் நிறுவனத்தின் மேலாண்மை நிலை அல்லது சான்றளிக்கப்பட்ட பட்டய கணக்காளர் சங்கத்தின் திறன் நிலைகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

உ. அங்கீகரிக்கப்பட்ட தொழிலின் 2 1/2 வருட பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.

**22. ஒலி இயக்கு பொறியியலாளர் (கெப்டன்)**

அ. ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

ஆ. திருமணமாகிய/திருமணமாகாத இருபாலாருக்கும் விண்ணப்பிக்கலாம்.

இ. 08 கார்த்திகை, 2024 அன்று 32 வயதுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.

ஈ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட ஒலி இயக்கு பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் ஒலி இயக்கு பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

உ. அங்கீகரிக்கப்பட்ட தொழிலில் 2 1/2 வருட பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.

**23. தலைவர் - கலாச்சார நடனக் குழு (கெப்டன்)**

ஆ. ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆ. திருமணமாகிய/திருமணமாகாத இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இ. 08 கார்த்திகை, 2024 அன்று 32 வயதுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.

ஈ. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் நான்கு வருட முழுநேர இளங்கலை கலை /நுண்கலை நடனப் பட்டம் தேவை.

உ. அங்கீகரிக்கப்பட்ட தொழிலில் பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.

**24. தலைவர் - கலாச்சார நடனக் குழு (லெப்டினன்ட்)**

ஆ. ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆ. திருமணமாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

இ. 08 கார்த்திகை, 2024 அன்று 28 வயதுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

ஈ. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் நான்கு வருட முழுநேர இளங்கலை கலை/நுண்கலை நடனப் பட்டம் தேவை.

உ. அங்கீகரிக்கப்பட்ட தொழிலின் பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.

**25. உளவியல் அதிகாரி (லெப்டினனட்):**

அ. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆ. திருமணமாகாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

இ. 08 கார்த்திகை, 2024 அன்று 28 வயதுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.

ஈ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட உளவியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் உளவியல் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

உ. குறைந்தபட்சம் 06 மாதங்கள் அரசு மருத்துவமனை/நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனை/நிறுவனத்தில் உளவியலாளராகப் பணியாற்றுதல்.

**26. சேவை நிபந்தனைகள்**

அ. ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் இலங்கை இராணுவக் கல்லூரியில் 03 மாத கால இராணுவ அடிப்படைப் பயிற்சி நெறியைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆ. இராணுவத் தளபதியின் தீர்மானத்தின்படி, ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அதிகாரிகள் இலங்கையின் எந்தப் பகுதியிலும் அல்லது வெளிநாட்டிலும் கடமைப் பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

இ. பயிற்சிக் காலப்பகுதியில் கெடேற் உத்தியோகத்தர்களின் அந்தஸ்து மற்றைய பதவிகளுக்கு சமமாக இருக்கும் என்பதுடன், அவர்கள் இராணுவச் சட்டத்திற்கும் சிவில் சட்டத்திற்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

ஈ. அரச சுகாதார அமைச்சு மற்றும் தனியார் மருத்துவமனையில் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால், முழுநேர இராணுவ சேவைக்கு விடுவிக்கப்படலாம் என்று நிறுவனத்தின் தலைவரின் சான்றிதழுடன் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

உ. தொழில்முறை அதிகாரிகளாகப் பணியமர்த்தப்பட்ட அதிகாரிகள், நில்தரினியன் இராணுவ ஆணை (12/2019) அறிவுறுத்தல்கள் மற்றும் தொழில்முறை அதிகாரி ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளின்படி திரையிடப்படுவார்கள்.

ஊ. பயிற்சிக் காலத்தின் இறுதியிலிருந்து (அதிகார ஆணைக்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து) 10 வருடங்கள் கட்டாயமாக இராணுவ சேவையில் ஈடுபடுதல் வேண்டும். அதற்காக, இலங்கை இராணுவத்துடன் பிணைமுறியொன்றுக்கும் ஒப்பந்தமொன்றுக்கும் வருதல் வேண்டும்.

உ. **பாடநெறியிலிருந்து விலகுதல்/நீக்குதல்.**

(1) பயிற்சிக் காலப்பகுதியில் கெடேற் உத்தியோகத்தர் ஒருவர் தனது சுய விருப்பில் தனது அபேட்சகத்துவத்தை முடிவுறுத்துவாராயின், கெடேற் உத்தியோகத்தர் சார்பில் இலங்கை குடியரசுக்கு அதுவரை ஏற்க நேரிட்ட எல்லாச் செலவுகளையும் அவருடைய பாதுகாவலர் அல்லது பிணையாளர்கள் இலங்கை குடியரசுக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

(2) கெடேற் உத்தியோகத்தர் ஒருவர் பயிற்சிக் காலத்தில் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் துர்நடத்தை காரணமாக தனது மோசமான பாதுகாப்பு செயல் திறன், தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காரணிகள் காரணமாக அதிகார ஆணை வழங்கப்படுவதற்கு தகுதியற்றவர் என உத்தியோகத்தர்களினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், உத்தியோகத்தர் சார்பில் இலங்கை குடியரசுக்கு ஏற்க நேரிட்ட எல்லாச் செலவுகளையும் அவருடைய பாதுகாவலர் அல்லது பிணையாளர்கள் இலங்கை குடியரசுக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

(3) பாடநெறியிலிருந்து விலகிய, விலக்கப்பட்ட அல்லது மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் தகுதியற்றவர் என பயிற்சியிலிருந்து நீக்கப்பட்ட கெடேற் உத்தியோகத்தர் ஒருவருக்கு மீண்டும் இலங்கை இராணுவத்தின் கெடேற் உத்தியோகத்தர் ஒருவராக இணைந்து கொள்ள முடியாது.

**27. சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்:**

இலங்கை இராணுவத்தின் நிரந்தரப் படையின் உத்தியோகத்தர்களாக இரண்டாம் நிலை லெப்டினனட் ஆரம்ப பதவியில் அதிகார ஆணைக்கு நியமிக்கப்படும் போது, அவர்கள் இலங்கை இராணுவத்தின் உத்தியோகத்தர்களுக்குரிய பின்வரும் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்படுவார்கள்.

| தொடர் இல. | பதவி | அரச முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 3/2016 இன் படி | | |
|---|---|---|---|---|
| | | திரட்டிய சம்பளம் 2020 இலிருந்து | 2020.01.01 முதல் சம்பள ஏற்றம் | ஆகக்கூடிய திரட்டிய சம்பளம் |
| 1 | இரண்டாவது லெப்டினன்ட் | ரூ. 41,905.00 | - | - |
| 2 | லெப்டினன்ட் | ரூ. 47,615.00 | 30×1335 (வருடாந்த) | ரூ. 87,665.00 |
| 3 | கெப்டன் | ரூ. 55,625.00 | 24×1335 (வருடாந்த) | ரூ. 87,665.00 |
| 4 | மேஜர் | ரூ. 60,965.00 | 22×1335 (வருடாந்த) | ரூ. 90,335.00 |
| 5 | லெப்டினன்ட் கர்ணல் | ரூ. 62,595.00 | 22×1630 (வருடாந்த) | ரூ. 98,455.00 |
| 6 | கர்ணல் | ரூ. 76,175.00 | 17×2170 (வருடாந்த) | ரூ. 113,065.00 |
| 7 | பிரிகேடியர் | ரூ. 80,515.00 | 15×2170 (வருடாந்த) | ரூ. 113,065.00 |
| 8 | மேஜர் ஜெனரல் | ரூ. 88,000.00 | 12×2700 (வருடாந்த) | ரூ. 120,400.00 |
| 9 | லெப்டினன்ட் ஜெனரல் | ரூ. 93,400.00 | 10×2700 (வருடாந்த) | ரூ. 120,400.00 |
| 10 | ஜெனரல் | ரூ. 101,500.00 | 7×2700 (வருடாந்த) | ரூ. 120,400.00 |

28. **ஏனைய வசதிகள் :**

பின்வரும் மாதாந்த கொடுப்பனவுகள் செலுத்தப்படும்:

அ. தகைமை கொடுப்பனவுகள்.

ஆ. இலவச உணவு அல்லது உணவுக் கொடுப்பனவுகள்.

இ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டிருக்கையில் அனுமதி குலைவுப்படி (திருமணமான உத்தியோகத்தர்களுக்கு மட்டும்).

ஈ. சீருடை பேணல் கொடுப்பனவு.

29. **பின்வரும் வசதிகள் வழங்கப்படும் /கொடுப்பனவுகள் செலுத்தப்படும் :**

அ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டிருக்கையில் இலவச தங்குமிட வசதி.

ஆ. வாடகை வீடுகளில் வசிக்கும் போது மட்டுப்படுத்தப்பட்ட வீட்டு வாடகை.

இ. இலவச சீருடை.

ஈ. திருமணமான உத்தியோகத்தர்களுக்கு பணியாள் படி (Batmen Allowance) அல்லது திருமணமாகாத உத்தியோகத்தர்களுக்கு பணியாள் சேவை (Batmen services).

உ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வேலைத்தளத்திலிருந்து வீடு வரை பிரயாணம் செய்வதற்கு மாதத்திற்கு ஒரு தடவை புகையிரத ஆணைச்சீட்டொன்று.

30. சம்பளம் மற்றும் அடுத்த கட்ட சேவை நிபந்தனைகள் தொடர்பில் பின்வரும் ஒழுங்குவிதிகள் உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும்.

அ. இராணுவ சம்பளக் கோவை

ஆ. 1993 ஆம் ஆண்டு ஓகத்து 17 ஆம் திகதிய 780/7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 1992 ஆம் ஆண்டின் இராணுவ உத்தியோகத்தர் (நிரந்தர படையணி) ஒழுங்குவிதிகள்.

இ. 1989 ஆம் ஆண்டு யூன் 15 ஆம் திகதிய 562/11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் இராணுவ ஓய்வூதிய மற்றும் சம்பளப் பணிக்கொடை பிரமாணக் குறிப்பு.

31. இங்கு கீழே பந்தி 32 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரகடனப் பத்திரமொன்றில் பெற்றோர் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடப்பட வேண்டும் என்பதுடன், அதனை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி அபேட்சகர்களை நியமிப்பதற்கு முன்னர் அபேட்சகர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் பிரகடனத்தில் உள்ளவாறு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் பிணைமுறியொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும். தந்தை உயிருடன் இருக்கும் கெடேற் உத்தியோகத்தர் ஒருவரின் பாதுகாவலராக தந்தை இருப்பார் என்பதுடன், அவர் உயிருடன் இல்லாதிருப்பின் மட்டும் தாய் அல்லது பாதுகாவலர் பாதுகாவலராக இருப்பார்.

32. **விண்ணப்பதாரரின் தாய், தந்தை அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடப்பட வேண்டிய பிரகடனம்**:

அ. நான், இலங்கை இராணுவத்தின் கெடேற் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பதாரரான ...................... என்பவரின் தந்தை/தாய்/பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ பயிற்சி நெறியைத் தொடர தெரிவு செய்யப்படின், இங்கு பின்வரும் விடயங்கள் தொடர்பான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(1) பயிற்சிக் காலத்தின் போது விண்ணப்பதாரருக்கு ஏற்க நேரிடும் அனைத்து தனிப்பட்ட செலவுகளையும் ஏற்றல்.

(2) மேற்கூறிய விண்ணப்பதாரர் பயிற்சிக் காலப்பகுதியில் சுய விருப்புடன் அதிகார ஆணையிலிருந்து வெளியேறினால், அவர் சார்பில் அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்ட அனைத்து செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிச் செலுத்துதல்.

(3) மேற்குறிப்பிட்ட விண்ணபதாரர் பயிற்சிக் காலப்பகுதியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் (துர்நடத்தை காரணமாக அல்லது தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காரணி காரணாக) அதிகார ஆணை பெறுவதற்குத் தகுதியற்றவர் என அதிகாரிகளினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமாயின், அவர் சார்பில் அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்ட அனைத்து செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிச் செலுத்தல்.

❖ பொருந்தாத சொற்களை வெட்டி விடுக.

.................................................................
தாய்/தந்தை/பாதுகாவலரின் கையொப்பம்.

பெயரும் முகவரியும் (தெளிவான எழுத்துக்களில்) : .................................................................
திகதி: .................................................................
சாட்சி கையொப்பம்: .................................................................
பெயரும் முகவரியும் (தெளிவான எழுத்துக்களில்): .................................................................

33. **மொழித் தேவைகள்**: தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்திற்கும் அச்சட்டத்திற்கான திருத்தங்களுக்கும் அமைவாகவும், இலங்கைக் குடியரசின் அரசகரும மொழிக் கொள்கையை அமுல் செய்வதற்கு காலத்துக்கு காலம் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கும் ஏற்ப செயற்படுதல் வேண்டும்.

34. **அடையாளத்தை உறுதிப்படுத்தல்**: விண்ணப்பதாரர்கள் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும். இதற்காக ஆட்பதிவு திணைக்களம் அல்லது தபால் மா அதிபரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

35. பொதுச் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை, அவர்கள் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் விடுவிக்க முடியும் என்ற திணைக்களத் தலைவரின் அத்தாட்சியுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

36. **விண்ணப்பங்கள்**: விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டு, 2024 கார்த்திகை 16 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, "ஆளனி நிருவாகப் பணிப்பாளர் சபை, இலங்கை இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு" என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை இராணுவ நிரந்தர படையில் குறுகியகால கெடேற் உத்தியோகத்தர் பாடநெறியின் கெடேற் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும், இராணுவத் தலைமையகத்தினால் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படவும் மாட்டாது. மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்வதற்கும் www.army.lk எனும் இணையத்தளத்தினுள் பிரவேசிக்கவும்.

37. விண்ணப்பத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் நிழற் பிரதிகளை அனுப்புதல் வேண்டும்:

அ. பிறப்புச் சான்றிதழ்.
ஆ. கல்வித் தகைமைகளை அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ்கள்.
இ. பாடசாலை விடுகைச் சான்றிதழ்.
ஈ. கிராம அலுவலர் சான்றிதழ்.
உ. பொலிஸ் தடையகற்றல் சான்றிதழ்.
ஊ. விளையாட்டு மற்றும் இணைச் செயற்பாடுகளுக்கான சான்றிதழ்கள்.
எ. விண்ணப்பதாரரை அறிமுகமான (நற்சாட்சிப் பத்திரமொன்றை வழங்கக்கூடிய ஒருவரிடமிருந்து) நபர்களிடமிருந்து அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களும் விண்ணப்பதாரர் இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சாட்சிப் பத்திரமொன்றும்.
ஏ. பொருத்தமான ஏனைய சான்றிதழ்கள்.
ஐ. மேலும், கிராம அலுவலரினால் அல்லது சட்டத்தரணி ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நிழற் பிரதியொன்றையும், அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 2" × 2½" அளவிலான புகைப்படம் ஒன்றையும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

38. நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல்: மேற்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் ஆரம்ப தெரிவுக்கு உட்படுத்தப்படுவார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் இராணுவத் தளபதியால் விதிக்கப்படுகின்றவாறு பரீட்சைகளுக்குத் தோற்றுதல் வேண்டும். பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படுகின்ற தெரிவுக் குழுவின் முன்னால், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு இறுதியாக தெரிவு செய்யப்படுவார்கள்.

39. தேர்வுக் குழுவினால் நேர்முகப்பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடம், நேரம் மற்றும் திகதி என்பன கடிதம் மூலம் அறியத்தரப்படும். நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும். இது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் பயணச் செலவுகள் அல்லது பிற செலவுகள் எதுவும் இலங்கை குடியரசினால் செலுத்தப்படமாட்டாது.

40. விண்ணப்பதாரி ஒருவரைப் பரிந்துரைக்க முயற்சி செய்யும் எவரும் நட்சான்றிதழொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்யலாம். விண்ணப்பதாரியொருவரின் தேர்வை எந்த வகையிலும் தூண்டுவது அல்லது செல்வாக்குச் செலுத்த முயற்சிப்பது விண்ணப்பதாரியை தகுதி இழக்கச் செய்யும்.

41. ஆட்சேர்ப்புக்குத் தகைமை பெறாத விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது. அத்தகைய விண்ணப்பதாரர்களினால் முன்வைக்கப்படுகின்ற விசாரணைகள் ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

**குறிப்பு** - இந்த வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வாசகங்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படின், சிங்கள மொழிமூல வாசகம் மேலோங்கி நிற்கும்.

எச் எல் வீ எம் லியனகே ஆர்டப்ளியூபீ ஆர்எஸ்பீ என்டியூ
லெப்டினனட் ஜெனரல்,
இராணுவத் தளபதி.

இலங்கை இராணுவத் தலைமையகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர,
கொழும்பு,
2024, ஒற்றோபர் 21.

11-135/2

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

(மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு)

01. **பதவி** : பணிப்பாளர் (சமூகப்பணிக் கல்லூரி) பதவி - 01

01. **வயதெல்லை** : விண்ணப்பதாரர் 25 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்வாரியான விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது.)

02. **கல்வித் தகைமைகள் : வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு** (கீழ்க் காணப்படும் அ அல்லது ஆ)

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சமூக விஞ்ஞான பாடங்களில் 04 வருட சமூகப் பணி முதலாம் பட்டத்துடன் (Social Work) தொடர்பான முதுமாணிப் பட்டம் பெற்றிருத்தல்.

(ஆ) அரசாங்க சேவையில் நியதிச்சட்ட சபையொன்றில் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறைந்தபட்சம் 15 வருடங்கள் சமூகப்பணி கல்வி முகாமைத்துறையில் சேவையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு**

(அ) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் சமூகப்பணிக் கல்வி முகாமையாளர் சேவை ஒன்றில் I ஆம் தர பதவியில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் சேவையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல்.

03. **நேர்முகப் பரீட்சைக்கான புள்ளி வழங்கும் முறை :**

| | | |
|---|---|---|
| 01 | கல்வித் தகைமைகளுக்காக (அடிப்படை தகைமைகளுக்கு மேலதிகமாக) | 30 புள்ளிகள் |
| 02 | குறிப்பிட்ட துறையில் மேலதிக அனுபவம் | 30 புள்ளிகள் |
| 03 | வேறு திறன்கள் | 15 புள்ளிகள் |
| 04 | நேர்முகப் பரீட்சை செயற்றிறன் | 25 புள்ளிகள் |
| | **மொத்தம்** | **100 புள்ளிகள்** |

04. **சம்பள அளவுத்திட்டம்** : HM 1-3 -(ரூபா 86,865.00-15 × 2,270 - ரூபா 120,915.00)

05. **பதவி நிலைப்படுத்தும் போதுள்ள நிபந்தனைகள்**

i. சகல விண்ணப்பதாரிகளும் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.
ii. இப்பதவி நிரந்தரமானது.
iii. அரசாங்கம் அனுமதித்த சதவீதத்திற்கு ஏற்ப ஊழியர் சேமலாப நிதியத்திற்கான கொடுப்பனவு செலுத்தப்படல் வேண்டும்.
iv. நன்னடத்தைக் காலம் மூன்று வருடத்திற்கு உட்பட்டதாக இருக்கும்.

**குறிப்பு**: இவ் வெற்றிடமானது சீதுவை பிரதான அலுவலகத்தை மையமாகக் கொண்டு தெரிவுசெய்யப்படுவார்கள் மேலும் பிரதான அலுவலகத்தில் பணியாற்றுதல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள் :**

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க மற்றும் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் கொண்டுவரப்படக்கூடிய சட்டதிட்டங்கள் மற்றும் விதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை :**

நியமன அதிகாரியின் மூலம் உருவாக்கப்படும் நேர்காணல் சபையினால் கட்டமைக்கப்பட்ட முறையில் நேர்காணல் நடத்தப்படும். அதிகூடிய புள்ளிகளை பெற்றவர்களின் திறன்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்படும்.

விண்ணப்பதாரிகளின் முழுமைப்படுத்தப்பட்ட சுயவிபரக்கோவை உள்ளடக்கிய விண்ணப்பம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2024.11.22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் பதவி கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும். முழுமைப்படுத்தாத, தெளிவற்ற அல்லது தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரசாங்கத் துறையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

கலாநிதி ரவீந்திர விதானாரச்சி,
பணிப்பாளர் நாயகம் (பதில் கடமை),
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
லியனகேமுல்லை, சீதுவை,
2024, நவெம்பர் 04.

11-171

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார அமைச்சு

### ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2024, செத்தெம்பர்

2014.10.11 ஆந் திகதிய 1883/ 17 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக்கோவையின் 08 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பும், அத்தோடு பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்துவதற்கு முன்பும், உத்தியோகத்தர் ஒருவர் அந்நியமனம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து மூன்று வருட காலத்தினுள் சித்தியடைய வேண்டியதுமான திணைக்களப் பரீட்சை 2024.12.21 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

02. **தகைமைகள்**. உரிய பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களும், நியமனத்தில் உறுதிப்படுத்தப்படாத பல் சத்திர சிகிச்சை நிபுணர்களும் இந்தப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும். மேலும் இத்திணைக்களப் பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத நிர்வாகத் தரத்தைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

03. **விண்ணப்பங்கள்**.- இச் சுற்றுநிருபத்தில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார அமைச்சு, இலக்கம் 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, "சுவசிரிபாய", கொழும்பு - 10 என்னும் முகவரிக்கு 2024.11.20 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2024 செத்தெம்பர்" என குறிப்பிடுதல் வேண்டும். இத்திணைக்களப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதை தனிநபர் கோவைகளை பேணும் உத்தியோகத்தரும், விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் சரியானவை என்பதை நிறுவன தலைவரும் சான்றுப்படுத்துதல் கட்டாயமாகும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா 110 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையொன்றையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

**கவனிக்கவும்**.- மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பம் A4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட வேண்டும். முதற்பக்கத்தில் இலக்கம் 01 - 04 (உ) தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 04 (C)-09 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

04. **பரீட்சைக் கட்டணம்.-**

(i) முதன் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விலக்களிக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25.00 வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடி நீக்கம் புரியப்படுதல் வேண்டும்.

(ii) எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படுதலோ புரியப்படமாட்டாது.

05. **பரீட்சைக்கு உட்படுத்தல்.-**

(i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ் அனுமதிப்பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்த ஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ii) விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை ;
(இ) வலுவுள்ள அனுமதிப்பத்திரம்;
(ஈ) வலுவுள்ள கடவுச்சீட்டு.

(iii) தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் தங்களினது பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலையம் என்பவற்றினை பெற்றுக்கொண்டு தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவரின் கடிதத்துடன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில், இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுட்டெண்ணில் தாங்கள் பரீட்சையினை மேற்கொள்ள முடியும். அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றவர்கள் கட்டாயமாக கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு வருதல் வேண்டும். (கையொப்பத்தினை உறுதிப்படுத்திய கடிதம் அல்லது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை முன்னளிப்பு செய்யாதவர்கள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்). (சுகாதார அமைச்சின் இணையத்தள முகவரி : www.health.gov.lk).

06. **பரீட்சைத் திட்டம்.-** இப்பரீட்சை, மூன்று எழுத்து மூல கட்டுரை வினாப்பத்திரங்களையும் சிங்களம்/ தமிழ் வாய்மொழிப் பரீட்சை ஆகிய 04 பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக் கொள்ளலாம்.

07. **பரீட்சைப் பாடத்திட்டம்.-**

7.1 **எழுத்துப் பரீட்சை**

7.1.1 **தாபனவிதிக்கோவை வினாத்தாள்**
நேரம் 02 மணித்தியாலம். 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**பாடவிதானம்**
(i) சுகாதார அமைச்சின் சுகாதாரத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்.
(ii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள்.
(iii) தாபனவிதிக்கோவை
I ஆம் பிரிவு :- VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII அத்தியாயங்கள்.
II ஆம் பிரிவு :- XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

7.1.2 **வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம் வினாத்தாள்**
நேரம் : 1 1/2 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**பாடவிதானம்**

சுகாதாரக் கைந்நூல்

(i) வைத்தியசாலைகள், பொதுச் சுகாதார நிர்வாகம்

(ii) ஆய்வுகூட சேவை முகாமைத்துவம்

(iii) மருந்து முகாமைத்துவம்

7.1.3 **கணக்கியல் :**

நேரம் 02 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்,

**பாடவிதானம்**

(i) சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்

(ii) சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைந்நூலில் நிதி தொடர்பான பந்தி

(iii) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப்பிரமாணம்

| | |
|---|---|
| I ஆம் அத்தியாயம் - | நிதிப்பிரமாணம் 1, 2, 78 |
| II ஆம் அத்தியாயம் - | நிதிப்பிரமாணம் 90, 91, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 113, 115, 118, 119 |
| III ஆம் அத்தியாயம் - | நிதிப்பிரமாணம் 124, 125, 126, 127, 128, 131, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 142, 143, 151, 152, 154, 155, 156, 189 |
| V ஆம் அத்தியாயம் - | நிதிப்பிரமாணம் 200, 201, 215, 225, 238, 245, 255, 257, 260 |
| VI ஆம் அத்தியாயம் - | நிதிப்பிரமாணம் 380, 381, 382, 383, 384, 385, 386, 388, 389, 390, 391, 392, 393, 394 |
| VII ஆம் அத்தியாயம் - | நிதிப்பிரமாணம் 488, 493 |
| XIII ஆம் அத்தியாயம் - | நிதிப்பிரமாணம் 715, 716, 756, 757, 758 |

**பெறுகை வழிகாட்டிக் கோவை :**

1 ஆம் அத்தியாயம் - அனைத்துப் பிரிவுகளும்

2 ஆம் அத்தியாயம் - 2.3, 2.4, 2.5, 2.6, 2.7, 2.8

3 ஆம் அத்தியாயம் - 3.1, 3.2, 3.3, 3.4, 3.5, 3.6, 3.7, 3.8, 3.9

7.2 **சிங்களம்/தமிழ் /வாய்மொழிப் பரீட்சை.**- சிங்களம்/தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும்பொழுது மேலோங்கும் நிகழ்வுகள் தொடர்பாக சிங்கள மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியிலும், தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியிலும் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல். (நேரம் : 10 நிமிடம்)

08. **பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.**- பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினைப் பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரனியல் உபகரணங்களைப் பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தை உங்கள் நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதன் ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்களை www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

**குறிப்பு.**- இச்சுற்றுநிருப கடிதத்தில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் ஏதாவது ஒவ்வாமை காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.

டாக்டர் பீ.ஜீ.மஹீபால,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிறிபாய",
385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு - 10,
2024.11.05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| அலுவலக பிரயோகத்தின் பொருட்டு |
|---|

**ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2024, செத்தெம்பர்**

01. (அ) (i) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (தமிழில்) :..............................................................................................
..............................................................................................................................................

(ii) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :..............................................................................................
..............................................................................................................................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) பதவி (உரிய கூட்டினுள் (✓) அடையாளமிடுக).

(i) வைத்திய உத்தியோகத்தர் : ☐ (ii) பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர் : ☐

(iii) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :..................................

(iv) ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி/ தரம் II :................................

02. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூட்டினுள் (✓) அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் (x) குறியை இடவும்.

வைத்தியசாலைகள் மருந்துச்சாலைகள் என்பவற்றின் நிர்வாகம் : ☐ தாபன விதிக்கோவை : ☐ கணக்கியல் : ☐

சிங்களம் வாய்மொழி : ☐ தமிழ் வாய்மொழி : ☐

03. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (உரிய கூட்டினுள் (✓) அடையாளத்தை இடவும்.)

சிங்களம் : ☐ ஆங்கிலம் : ☐ தமிழ் : ☐

04. (அ) (i) தற்பொழுது சேவையாற்றும் சேவை நிலையம் :-----.

(ii) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது : மத்திய அரசின்கீழ் ☐

மாகாண அரசின்கீழ் ☐

(ஆ) (i) மாகாண சபையெனின் உரிய மாகாணம் :..................................................................................

(ii) அதற்குரிய மாவட்டம் :..................................................................................

(இ) (i) கையடக்கத் தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

(ii) மின்னஞ்சல் முகவரி :.....................................................

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

(உ) கீழ்வரும் பரீட்சை நிலையங்களுள் விரும்பிய பரீட்சை நிலையம்.- (தெரிவுசெய்யும் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அழைக்கப்படுவர்) பொருத்தமான கூட்டினுள் சரி (✓) அடையாளமிடுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | | கந்தானை | | அம்பாந்தோட்டை | | அம்பாறை | |
| களுத்துறை | | காலி | | பதுளை | | வவுனியா | |
| குருநாகல் | | அநுராதபுரம் | | இரத்தினபுரி | | பொலநறுவை | |
| கண்டி | | மட்டக்களப்பு | | யாழ்ப்பாணம் | | திருகோணமலை | |

(ஊ) அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9" × 4" அளவுள்ள ரூபா 110.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறைகள் 01 விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(எ) (i) அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :..........................................................................................
..........................................................................................................................................

(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :..........................................................................................
..........................................................................................................................................

05. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீரா? :..........................................................................................
(ஆ) முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? ::..........................................................................................

| முத்திரைக் கூட்டில் (முத்திரையை ஒட்டி அதன் மீது கையொப்பமிடுக.) |
|---|

06. விண்ணப்பதாரரின் உறுதியுரை:

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்-

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக என்றபடியால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/ முதன் முறை அல்லாதபடியால் ரூபா .......... பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளேனெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதார அமைச்சினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் அமைவேன் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :........................

07. **சுயவிபரக் கோவையினைக் கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ் :**

இவ்விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் / பின்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், இத்திணைக்களப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பதாரி பூர்த்திசெய்துள்ளார் என்பதையும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் விண்ணப்பம் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................
பெயரும், கையொப்பமும்.

.......................
திகதி

08. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

திருவாளர்/ திருமதி/ செல்வி ................................ என்பவர் எனது நிறுவனத்தில் சேவை புரியும் வைத்திய உத்தியோகத்தர்/ பல் வைத்தியர் என்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/ அல்லாத படியால் ரூபா ............ பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/ முத்திரை ஒட்டவேண்டியதில்லை எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக் கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :.......................

09. **விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ் :**

திருவாளர்/ திருமதி/ செல்வி ................................. என்பவர் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர் ஒருவராக/ பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு/ விசேட இயக்கத்
தலைவரின் கையொப்பம்
(பதிவு முத்திரை இடப்படுதல் வேண்டும்).

திகதி :.......................
(தேவையற்றவற்றைக் கீறிவிடவும்.)

*11-181*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.